நெல்லை மாவட்டம் வண்ணார்பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் மாவட்ட நிர்வாகம் கிங் லைப் அறக்கட்டளை, தி ரைஸ், அனைத்து உலக தமிழ் எழுமின் தொழிலதிபர்கள், கூட்டமைப்பு,நான் முதல்வன் திட்டம் இணைந்து நடைபெற்ற தனியார் வேலை வாய்ப்பு முகாமில் 194 தனியார் வேலை வாய்ப்பு நிறுவனங்கள் மூலம் 5300 வேலை நாடுனர்களுக்கு தனியார் பணி நியமன ஆணைகளை வழங்கும் நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு,உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர்.கோவி. செழியன் ஆகியோர் பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ.மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், ஆணையாளர் மரு.மோனிகா ராணா, துணை மேயர் ராஜ், முன்னாள் அமைச்சர்கள் மைதீன்கான்,பூங்கோதை ஆலடி அருணா,அனைத்துலக தமிழ் எழுமின் நிறுவனர் அருட்பணி ஜெகத் கஸ்பர் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்கள்.

இராணிப்பேட்டை மாவட்டம் நெமிலி ஊராட்சி ஒன்றியம் வெளிதாங்கி புரம் ஊராட்சியில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கதிட்ட துவக்க விழாவில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி ஊட்டச்சத்து பழ வகைச் செடிகள் மற்றும் காய்கறி விதை தொகுப்புகளை பொது மக்களுக்கு வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜே.யு. சந்திர கலா, திட்ட இயக்குனர் பா ஜெயசுதா, ஒன்றிய குழுத் தலைவர் பி.வடிவேலு, ஊராட்சி மன்றத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் குடமுழுக்கு

திராவிட மாடல் ஆட்சியின் ஆன்மீக புரட்சிக்கு மைல்கல்லாக அமையும்!

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

திருச்செந்தூர், ஜூலை 7- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் நேற்று (05.07.2025) எழும்பூர், சீனிவாசப் பெருமாள் திருக்கோயில் சார்பில் கட்டப்படும் திருமண மண்டபம், வில்லிவாக்கம், அகத்தீஸ்வரர் திருக்கோயில் சார்பில் கட்டப்படவுள்ள பல்நோக்கு மண்டபம் அமைக்கும் இடம், கொளத்தூரில் கட்டப்பட்டு வரும் மூத்த குடிமக்கள் உறைவிடம் மற்றும் கொளத்தூர், பூம்புகார் நகரில் கட்டப்பட்டு வரும் கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதிய கட்டட கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயிகளின் சார்பில் கட்டப்பட்டு வருகின்ற திருமண மண்டபங்கள், மூத்த குடிமக்கள் உறைவிடம் மற்றும் கபாலீஸ்வரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகியவற்றின் கட்டுமான பணிகள் நேர்த்தியாக அமைந்திடும் வகையிலும், பணிகளை விரைவுப்படுத்திடவும் ஆய்வினை மேற்கொண்டோம். சென்னை, கொளத்தூர் ராஜாஜி நகரில் கடந்த 27.5.2025 அன்று முதலமைச்சர் அவர்கள் கொளத்தூர், பழனி மற்றும் திருநெல்வேலியில் மூத்த குடிமக்கள் உறைவிடம் கட்டுவதற்கு கட்டுமானப் பணிகளை தொடங்கி வைத்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துறையின் சார்பிலான ஆய்வுக் கூட்டங்களை மேற்கொள்கின்றபோது மூத்த குடிமக்களுக்காக கட்டுகின்ற உறைவிடங்களின் பணி முன்னேற்றத்தை தொடர்ந்து கேட்டறிந்து வருகின்றார். இந்தப் பணிகள் வரும் டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு மூத்த குடிமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். கொளத்தூரில் அமையவுள்ள மூத்த குடிமக்களின் உறைவிடத்தில் 100 மூத்த குடிமக்கள் தங்கும் வகையில் குளியலறை, கழிப்

பறை வசதியுடன் அறைகள், உணவருந்தும் அறை, நூலகம், மருத்துவ மையம், சிறு பூங்கா, யோகா மற்றும் தியான அறை, நடைபாதைகள் போன்ற வசதிகள் அமைக்கப்படுகின்றன. இந்த உறைவிடங்களை பராமரிக்க முன்னணி நிறுவனங்களின் சமூக பொறுப்பு நிதி மூலம் நிதியுதவி வழங்கப்படுகிறது. கொளத்தூர் மூத்த குடிமக்கள் உறைவிடத்திற்கு இதுவரை ரூ.5 கோடி நிதி வரப்பெற்றுள்ளது.

தமிழ்க் கடவுள் முருகனுக்கு இந்த ஆட்சியில் தொண்டு செய்வதற்கு கிடைத்த வாய்ப்பைப் போல் இதுவரையில் வேறு எந்த ஆட்சியிலும் கிடைக்கவில்லை. அதனை எங்கள் திராவிட மாடல் ஆட்சியின் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆட்சிக்கு கிடைத்த மிகப் பெரிய ஒரு வரப்பிரசாதமாக நினைக்கின்றோம். தமிழ்க் கடவுள் முருகனுக்கு தேவையான அனைத்தையும் நிறைவேற்றி தருகின்ற ஒரு ஆட்சியாக இந்த ஆட்சி அமைந்திருக்கின்றது. அந்த வகையில் பழனி திருக்கோயிலின் பெருந்திட்ட வரைவு பணிகளுக்கு முன்பாகவே குடமுழுக்கு நிறைவு செய்யப்பட்டு இன்றைக்கு திருப்பதி போல் மிக பிரம்மாண்டமாக பழனி திருக்கோயில் காட்சி அளித்து கொண்டிருக்கிறது. அறுபடை வீடுகளில் முதல் படை வீடான திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வருகின்ற 14.7.2025 குடமுழுக்கு நடைபெற இருக்கின்றது. இந்திய ஒன்றியத்தையே திரும்பி பார்க்க வைத்திருக்கின்ற வகையில் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி குட முழுக்கு வருகின்ற 7ஆம் தேதி நடைபெற இருக்கின்றது. அதில் லட்சோப லட்சம் மக்கள் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி குடமுழுக்கு விழாவிற்கு மூன்று இடங்களில் தற்காலிக பேருந்து நிலையங்களும், திருக்கோயில் குடமுழுக்கை அனைத்து பகுதிகளிலும் காணும் வகையில் எல்இடி அகன்ற திரைகள் அதிக எண்ணிக்கையில் அமைக்கப்பட்டுள்ளன. பக்தர்களுக்கு தேவையான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மருத்துவ வசதி ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றன. பாதுகாப்பு பணியில் 6000 காவலர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதோடு 25 மருத்துவக் குழுக்களும், 27 இடங்களில் தீயணைப்பு வாகனங்கள் தயார் நிலையில் வைக்கப்படவுள்ளன. முதலமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் தலைமைச் செயலகத்தில் நடத்திய துறை ஆய்வுக் கூட்டத்தில் திருச்செந்தூர் திருக்கோயிலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள் குறித்து விரிவாக ஆய்வு செய்தார். பக்தர்களுக்கு லட்சக்கணக்கான உணவு பொட்டலங்கள் தயாரித்து வழங்கிடவும் உத்தரவு பிறப்பித்துள்ளார். மேலும், குடமுழுக்கு விழா பணிகளுக்காக மூன்று ஐஏஎஸ் அதிகாரிகளை இன்றிலிருந்து கூடுதல் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளனர். ஆகவே திருச்செந்தூர் திருக்கோயில் குடமுழுக்கு விழா சிறப்புடன் நடைபெறும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்து, இது இந்த ஆட்சியின் ஆன்மீக புரட்சிக்கு ஒரு மைல்கல் என்றே குறிப்பிடலாம்.

திருக்கோயில்களில் மருந்து சாத்திய பிறகுதான் குடமுழுக்கு நடைபெறும். திருச்செந்தூர் திருக்கோயிலில் குடமுழுக்கு நடந்த பின்னரே மருந்து சாத்தும் நிகழ்வு நடைபெறுவது மரபாக உள்ளது. குடமுழுக்கை தொடர்ந்து 48 நாட்கள் மண்டல பூஜை நடைபெறுகிறது. முதல் 30 நாட்கள் மண்டல பூஜையோடு திருக்கோயில் திருவிழாவும் தொடங்குகின்றது. ஆகவே திருச்செந்தூர் திருக்கோயிலுக்கு இந்த 30 நாட்களில் பக்தர்கள் எப்போது வந்து தரிசனம் செய்தாலும் குடமுழுக்கில் கலந்து கொள்ளுகின்ற புண்ணியம் கிடைக்கும். இத்திருக்கோயிலில் ஜூலை ஒன்றாம் தேதி முதல் யாகசாலை பூஜைகள் ஆறு நாட்கள் நடைபெறுகின்றன.

திருச்செந்தூர், திருக்கோயிலில் கடைபிடிக்கப்பட்டு வரும் மரபு மற்றும் கடந்த குடமுழுக்குகளின் பழக்க வழக்கத்தின்படி குட முழுக்கிற்கு முன்தினம் பகல் 12 மணிக்கு நடை அடைக்கப்படுவதோடு, மறுநாள் காலையில் குடமுழுக்கு நிறைவு பெற்ற பின், மருந்து சாத்தும் நிகழ்வு மாலை வரை நடைபெறும். அதற்கு பின்னரே பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிப்பது தொடர்பாக முடிவெடு க்கப்படும்.

அன்னதானம் என்ற நிலையில் எப்படி வேண்டுமென்றாலும் உணவு வழங்கினால் அது பக்தர்களுக்கு உடல் உபாதை ஏற்படுகின்ற போது இது போன்ற திருவிழா காலங்களில் பெரிய அளவிலான பாதிப்பை உண்டாக்கும். ஆகவே முறையான அனுமதி பெற்று யார் வேண்டுமானாலும் அன்னதானம் செய்யலாம். அவர்கள் வழங்குகின்ற அன்னதானத்தை பரிசோதிப்பதற்கு அன்னதான பரிசோதனை குழு ஒன்றை அமைத்திருக்கின்றோம். எங்களின் நோக்கம் வழங்கப்படுகின்ற அன்னதானத்தால் அதனைப் பெற்று அருந்துகின்ற பக்தர்களுக்கு எந்த விதமான உடல்நல பாதிப்பு ஏற்படக்கூடாது, அது இயற்கையான நேர்த்தியான உணவாக இருக்க வேண்டும் என்பதுதான்.

மக்களை நோக்கி விஜய் அவர்களின் பயணத்தை தொடங்க சொல்லுங்கள். அவர் பயணத்தையே செப்டம்பர் மாதத்திற்கு மேல் தான் தொடங்குவேன் என்று சொல்கிறார். நேற்று காத்திருந்த தொண்டர்களை கூட பார்க்க முடியாமல் இருந்த செய்தி ஊடகங்களில் வந்தது. ஆகவே அவர், முதலில் தன்னையும், தன்னை சார்ந்து இருக்கின்ற இயக்கத்தையும் பார்த்துக்கொள்ள சொல்லுங்கள். மக்களை பாதுகாக்க எங்களுடைய மக்களின் முதல்வர் இருக்கின்றார். நிச்சயமாக முதலமைச்சர் அவர்களின் முன்னெடுப்பில் யாருக்கும் எந்தவிதமான பாதிப்பும் வராமல் அதே நேரத்தில் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுகின்ற, வளர்ச்சிக்கு தேவையான கட்டமைப்புகளை அமைத்து மக்களுடைய தேவைகளை பூர்த்தி செய்துவிட்டு தான் நடவடிக்கையை மேற்கொள்வார். எடுத்தேன், கவிழ்த்தேன் என்பது போல் எங்கள் முதலமைச்சர் அவர்கள் மக்களை பாதிப்பிற்குள்ளாக்கும் எந்த ஒரு திட்டத்தையும் கொண்டு வருவதற்கு நிச்சயமாக முற்பட மாட்டார். ஆகவே விஜய் அவர்கள் தேவையில்லாமல் முதல் வரை சந்திப்பேன் என்று கூறிக் கொண்டிருக்கிறார். அறையில் அமர்ந்து கொண்டு அறைகூவல் விடுவதை முதலமைச்சர் அவர்கள் எளிதாக தனது லெப்ட் ஹேண்டில் (Left Hand) கையாண்டு செல்வார்.

மடப்புரம் திருக்கோயில் காவலாளி அவுட் சோர்சில் பணி புரிபவர். அவரது இறப்பு தொடர்பாக முதலமைச்சர் அவர்கள் தானே முன்வந்து வருத்தம் தெரிவித்துள்ளார். இதுபோல் எந்த மாநிலத்தின் முதலமைச்சரும் இப்படி தானாக முன்வந்து வருத்தம் தெரிவித்ததில்லை. அக்குடும்பத்திற்கு தேவையான நிவாரணத்தை வழங்கி இருக்கின்றார். இந்த சம்பவத்தில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்பட்டு, கடுமையான சட்டப்பிரிவின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவத்திற்கு தமிழக அரசே சிபிஐ விசாரணை கோரி இருக்கின்றது. தவறு எங்கு நடந்தாலும் விசாரணை முடிவில் யார் குற்றவாளியாக இருந்தாலும் தண்டிப்பதற்கு சட்டத்தின் ஆட்சி நடத்துகின்ற எங்கள் முதலமைச்சர் அவர்கள் தவறமாட்டார் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி. என். ஸ்ரீதர், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, கூடுதல் ஆணையர் திருமதி சி. ஹரிப்ரியா, இணை ஆணையர்கள் திருமதி கி.ரேணுகா தேவி, திருமதி ஜ.முல்லை, திருமதி பெ.க.கவெனிதா, மாநகராட்சி மண்டல குழுத் தலைவர்கள் கூ.பீ.ஜெயின், திருமதி சரிதா மகேஷ் குமார், கண்காணிப்பு பொறியாளர் பழனி, செயற்பொறியாளர் மணிவண்ணன், மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் நாகராஜன், ஐசிஎப் முரளிதரன், சந்துரு, மகேஷ் குமார், திருமதி அமுதா, கல்லூரி முதல்வர் திருமதி லலிதா மற்றும் அலுவர்கள் கலந்து கொண்டனர்.

இன்று (ஜூலை 7) - திவான் பகதூர் - திராவிட மணி

இரட்டை மலை சீனிவாசன் பிறந்த நாள் விழா!

திருவுருவச் சிலைக்கு அமைச்சர்கள் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை!

சென்னை, ஜூலை 7 - தமிழ்நாடு அரசின் சார்பில், திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, அவரது பெருமைகளைப் போற்றி அமைச்சர் பெருமக்கள், இன்று (7.7.2025) காலை 9.00 மணியளவில் சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், கோழியாளம் என்னும் கிராமத்தில் இரட்டைமலை - ஆதியம்மாள் தம்பதியினருக்கு 7.7.1859 அன்று மகனாகப் பிறந்தார். இவர் பள்ளியில் படிக்கின்ற காலத்தில் சாதிக் கொடுமை இன்னல்களைக் கண்டார். சாதி வேறுபாட்டை அறவே ஒழித்திட வேண்டும் என்று உறுதியாக கொண்டார். அதற்காகத் தென்னிந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து ஆதிதிராவிடர் மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைமைகளை நேரில் கண்டறிந்தார்.

ஏழை, எளிய மக்கள் கல்வி கற்பதன் அவசியத்தையும், சுகாதாரத்துடன் வாழ வேண்டும் என்றும், சுத்தமான ஆடைகளை அணிய வேண்டும் என்றும், அனைவரிடமும் ஒழுங்காகப் பேச வேண்டும் என்ற உயர்ந்த குணங்களைக் கடைபிடிக்க வேண்டும் என்றும் மக்களிடத்தில் வலியுறுத்தினார். மக்களை, கல்வி மற்றும் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையச் செய்திட வேண்டும் என்பதற்காகத் தம் ஆயுள் முழுவதும் நாட்டு மக்களுக்காகத் தொண்டுகள் செய்து வந்தார்.

1891ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக “பறையர் மகாஜன சபை” என்னும் இயக்கத்தின் மூலம், பறையன் நாளிதழ் தொடங்கி அதில் தம் கருத்துகளைத் தொடர்ந்து எடுத்துரைத்து வந்தார். 1893 ஆம் ஆண்டு இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் இந்தியாவிலேயே முதன்முறையாகப் பழங்குடியின மக்களின் மாநாட்டைக் கூட்டி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

1930-32ஆம் ஆண்டுகளில் இலண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாடுகளில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக அண்ணல் அம்பேத்கருடன் இணைந்து பங்கேற்று, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்கப்பட்டால்தான் தீண்டாமை ஒழியும் என்று தம் கருத்துகளை ஆணித்தரமாக எடுத்துரைத்தார். மக்கள் பணி செய்தமைக்காக, ஆங்கிலேய அரசு இவருக்கு 1926 ஆம் ஆண்டு ராவ்சாகிப் பட்டமும், 1930 ஆம் ஆண்டு ராவ் பகதூர் பட்டமும், 1936 ஆம் ஆண்டு திவான் பகதூர் பட்டமும் வழங்கிப் பாராட்டியது.

திவான் பகதூர் இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் 80 வது பிறந்த நாளன்று மனிதகுலத்திற்குச் சிறந்த சேவையாற்றி, தாம் சார்ந்த மக்களுக்குப் பல சாதனைகளைப் புரிந்தமைக்காக, 1939 ஆம் ஆண்டு மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தலைமையில், தமிழ்த்தென்றல் திரு.வி.க.அவர்கள் முன்னிலையில் ‘திராவிடமணி’ என்னும் பட்டம் வழங்கப்பட்டது.

இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் பதவி, புகழ் ஆகியவைகளை விரும்பாமல், தம் வாழ்நாள் முழுவதும் ஆதிதிராவிட, பழங்குடியின சமுதாயத்திற்கு அயராது உழைத்து, தாம் சார்ந்த சமுதாயத்தினருக்கு ஒரு ஞானியாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்து நன்மதிப்பைப் பெற்றுள்ளார் என்றால் அது மிகையாகாது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 15.8.2000 அன்று திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு நினைவு அஞ்சல் தலையினை வெளியிட்டார்.

முதலமைச்சர் அவர்கள், செங்கல்பட்டு மாவட்டம், அச்சரப்பாக்கம் பேரூராட்சியில் ரூபாய் 2 கோடி 18 இலட்சம் மதிப்பீட்டில் திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களைப் போற்றும் வகையில் அவர்தம் திருவுருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைத்து 27.2.2024 அன்று திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு அரசின் சார்பில், திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 7 ஆம் நாள் அரசு விழாவாக ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி, இன்று (7.7.2025) கொண்டாடப்படும் திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாளில் அவருடைய திருவுருவச்சிலைக்கு அமைச்சர் பெருமக்களுடன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு மாலையணிவித்து மரியாதை செய்து சிறப்பிக்கிறார்கள்.

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூர் தெற்கு ஒன்றிய கழக இளைஞரணி சார்பில், முத்தமிழ் அறிஞர், தமிழினத் தலைவர்,கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா, மற்றும் நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் இது பல்லாண்டு எனும் தலைப்பிலான திராவிட மாடல் அரசரின் சாதனை விளக்க தெருமுனை கூட்டம், சோழபாண்டியபுரம் ஊராட்சியில், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் வினோத் ஏகாம்பரம் தலைமையில், ஒன்றிய கழக செயலாளர் எம்.ராஜேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது, இந்தக் கூட்டத்தில், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் மற்றும் தலைமைக் கழக பேச்சாளர் க.நாகநந்தினி யுவராஜ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு, திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகள் மற்றும் சிறப்புத் திட்டங்களை எடுத்துரைத்தனர். இந்த தெருமுனைப் பிரச்சாரக் கூட்டத்தில், மாவட்ட, ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

செஞ்சி தாண்டவ சமுத்திரம்

கிராமத்திற்கு மினி பேருந்து சேவை!

செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஜூலை 7- விழுப்புரம் மாவட்டம் செஞ்சி எம்.ஜி.ஆர். நகர், ஜே.ஜே. நகர் நரிக்குறவர் பகுதி, கோனை, புதூர், தச்சம்பட்டு நெல்லி மலை வழியாக தாண்டவ சமுத்திரம் கிராமத்திற்கு மினி பேருந்து சேவை இயக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்தனர்.

இக்கோரிக்கையினை ஏற்று செஞ்சிஅன்னை அஞ்சுகம் அம்மாள் பேருந்து நிலையத்திலிருந்து தாண்டா சமுத்திரம் கிராமத்திற்கு மினி பேருந்து சேவை தொடக்க விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு சையத்அன்வர் தலைமை தாங்கினார். செஞ்சி வட்ட ஜமாத் தலைவர் சையத் அப்துல் மஜீத் பாபு, சையத் முனீர் ,சையத் ஆதம், சமியுல்லா ,ஜீனைத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் கவுன்சிலர் சையத் காஜா மொய்னுதீன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்துகொண்டு செஞ்சி பேருந்து நிலை யத்திலிருந்து தாண்ட சமுத்திரம் கிராமத்திற்கு புதிய மினி பேருந்து சேவையை கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

இதில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜய குமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், ஹிதாயதுல்லா, கலீபதுல்லா,நூர் ஜகான் ஜாபர்,சிங்கம் சேகர், சம்பத், இஸ்மாயில், தொண்டரணி பாஷா உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, திருவெண்ணைநல்லூர் கிழக்கு ஒன்றிய கழக இளைஞரணி சார்பில், முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் மற்றும் திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக்கூட்டம் ஒன்றிய கழகச் செயலாளர், மாவட்ட கவுன்சிலர் மா.சந்திரசேகரன் தலைமையில் சித்தானங்கூர் ஊராட்சியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ., உளுந்தூர்பேட்டை தொகுதி பொறுப்பாளர் இரா.ஸ்ரீதரன், வடக்கு மாவட்ட கழகப் பொருளாளர் வீசு.வீரபாண்டியன், தலைமைக் கழக பேச்சாளர் தா.தமிழ் கொண்டான் மற்றும் இளம் பேச்சாளர் சு.இன்பத்தமிழன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள், இதில் தேர்தல் பகுதி பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், ஒன்றிய கழக இளைஞரணி நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.